RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s176

OPEN ACCESS

# சைவ, கிறித்தவ சமய சமூகத்தில் இசையின் பங்கு

**மு. செல்வக்குமார் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தெள்ளார், திருவண்ணாமலை-604406, தமிழ்நாடு, இந்தியா

# The Role of Music in the Saiva and Christian Religious Communities

**M. Selvakumar [a, *]**

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts and Science, Thellar, Thiruvannamalai-604406, Tamil Nadu, India

* Corresponding Author: mselvam84enator@gmail.com

Received: 19-03-2022
Revised: 17-10-2022
Accepted: 02-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Music is the art of organizing sounds at the right time through melody, harmony, rhythm, and characteristics of the specific sound of instruments. If this is to be understood by ordinary people in general, the sound in the ears is a force that penetrates the heart through our pulses and veins and causes the subconscious mind to meditate. How has such music been used in devotion, how has it been used, how is it used, and what are the changes that have taken place due to them, even though it can be seen in many dimensions? What is the role of music in all non-religious communities? In particular, this article will be a study of the role of music in the Saiva and Christian communities and the benefits of the community.

**Keywords:** Music, Christian Community, Melody, Saiva Community, Harmony, Rhythm.

## முன்னுரை

ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்கள் கொண்டு பல புதிய ராகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் மூலம் இசையமைத்து மக்களிடத்தில் பல்வேறு வகையான பாடல்களை பதினெட்டாம் நூற்றாண்டு முதல் இன்றைய காலம் வரை காணமுடிகிறது. அத்தகைய இசையானது சைவ சமய சமூகத்திலும் கிறித்தவ சமய சமூகத்திலும் எத்தகைய பங்களிப்பை பெற்றுள்ளது அவற்றினால் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன என்பதைப் பற்றியும் சமயங்களில் பாடப் பின்பற்றப்படும் பாடல்கள் எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. அதனால் ஏற்படும் பயன்கள் என்ன, கடவுளை மக்கள் இசையினால் எவ்வாறு துதிக்கிறார்கள், கடவுளோடு இசையினால் ஒன்றிக்கும் பொழுது இசையின் வேலை என்ன, இசையின் வெளிப்பாடு அவர்களிடையே எவ்வாறு வெளிப்படுகிறது என்பது பற்றி அறியவும் இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

## இசையின் வளர்ச்சி

இசையானது இந்தக் காலத்தில்தான் தோன்றியது என்று வரையறுத்துக் கூற இயலாது. மனிதன் எப்பொழுது ஒலியைக் கேட்க முடிந்ததோ அப்பொழுதே இசையின் தொடக்கம் இருந்தது எனக் கூறலாம். அதன் தொடர்ச்சியாக 1825 பீத்தோவனின் பியூச் இசை, 1990-களின் தொடக்கத்தில் ஜாஸ் இசை, 1980களில் ஹார்ட்கோர் போன்ற பிரபலமான இசை அடங்கும். இருப்பினும் இருபதாம்

நூற்றாண்டில் இசையமைப்பாளர் ஜான் கேஜ் இசைக்கு ஒரு வரைமுறை கொடுத்தார் அதாவது எந்த ஒலியும் இசையாக இருக்கலாம் என்று நினைத்தார். உதாரணமாக இரைச்சல் இல்லாத ஒலிகள்.

## பண்டைய இசைத்தமிழ்

பண்டைய இசைத்தமிழ் "ஈதல் இசைபட வாழ்தல்" என்றும் சொல்லே ஒன்றே தமிழ்நாட்டில் இசையின் தன்மையைக் குறிக்கும். இங்கு இசை என்பது மங்கலமாக அமைகிறது, பெருமையைக் குறிக்கிறது (Lakshmi, 2017). குழந்தைப் பருவத்திலிருந்தே ஆடல் பாடலோடு வளர்ந்து வருபவர்கள் மனிதர்கள். இறைவனுக்கு உகந்த பொருள் இசைதான், இசையின் மூலம் தான் இறைவனிடம் நாம் பக்தி கொள்ள இயலும். இறைவனைப் பற்றிக் கொள்ளவும் முடியும். இறைவனே இசைக்கு மயங்கும்போது மனிதர்கள் சொல்லவா வேண்டும்.

## இசை என்னும் தமிழ்

தமிழ் என்ற சொல்லே இசைதான் என்னும் பொருள்தரும். "தமிழரின் நீர்மை பேசி" என்னும் சம்பந்தரின் வார்த்தைகளால் நாம் உணரலாம் அதனால்தான் சேக்கிழார் பெருமான் "பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்" என்று குறிப்பிடுகின்றார். பிறந்ததிலிருந்து இறக்கும் வரை ஐயம் ஏற்பதில் இருந்து அரை காண்பது வரையிலும் தமிழ் மக்களிடத்தே இன்றியமையாதது வழங்கி வருவது இசை ஒன்றே. எனவே தமிழர்களின் இசையின் மூலம் நாம் இறைவனை இசைய வைப்பதும் இயற்கைதானே.

உழைத்த களைப்பு போவதற்கும் உள்ளத்தில் ஏற்பட்டு நிறைந்திருக்கும் எதார்த்த உணர்ச்சிகளை புலப்படுத்துவதற்கும் மக்கள் ஆடலையும் பாடலையும் கையாண்டு மகிழ்ந்தனர். பாடல்களுக்கு அடிப்படைக் காரணம் பொதுவாக இருந்தாலும் அமைப்பும், வளர்ச்சியும் ஒரே தன்மையாக இல்லை. நாட்டுக்கு நாடு - இனத்துக்கு இனம் ஆடல், பாடல்கள் வெவ்வேறு வடிவங்கள் கொண்டு வளர்ந்து வந்தன. அதுபோலவே நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் மாறுபட்ட ஆடல் பாடல் கலைகளும் அமைந்தன. இசையும் வெவ்வேறு வகையில் அமைந்தது.

தமிழை எடுத்துக்கொண்டால் தொல்காப்பியக் கருத்துப்படி இசை இரண்டு வகைப்படும். மக்களின் தொழிலுடன் இசைந்து தொழிலுக்கு உதவும் கருவியின் இசை ஒன்று. மற்றொன்று தொழில் தொடர்பில்லாமல் பொழுதுபோக்காகவும் இன்பத் துறையாகவும் அமைந்து உதவும் கருவியின் இசை ஒன்று. முன்னதைப் பறை என்னும் பின்னதை யாழ் என்றும் குறித்து இப் பாட்டுக்குள் அடைத்துள்ளார்.

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப" (Arunachalam, 1994)

குறிஞ்சி முதலான ஐவகை நிலங்களுள் ஒவ்வொன்றுக்கும் சிறப்பான தொழில் இசையும் இன்ப இசையும் உண்டு என்றும் கருத்தால் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே உரியப் பறையும் யாழும் குறிப்பிட்டுள்ளார்.

| நிலம் | பறை | யாழ்(பண்) |
|---|---|---|
| குறிஞ்சி | வெறியாட்டுப்பறை | குறிஞ்சி |
| முல்லை | ஏறுகோட்பறை | சாதாரி |
| மருதம் | நெல்லரிப்பறை | மருதம் |
| நெய்தல் | நாவாய்ப்பறை | செவ்வழி |
| பாலை | ஆறலைப்பறை | பாலை |

ஒவ்வொரு நிலத்திற்கும் இசையும் இசைக்கருவிகளும் ஒன்றாய் அமைந்தாலும் பிறகு அந்தந்த நிலத்திற்கு சிறப்பாக அமைந்த பொழுது பண்பாடு, தொழில் போன்றவற்றின்படி அமையப்பெற்றது. பாடல்கள் வழியாக சைவசமயச் சமூகமும் கிறித்துவ சமயச் சமூகமும் மேலும் சைவ சமயத்திலும் சரி, கிறிஸ்தவ சமயத்திலும் சரி பாடப்படும், இசைக்கப்படும் பாடல்களை எடுத்துக் கொண்டால் தெய்வங்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் பாடப்பெறும் பாடல்கள் அனைத்தும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவே அமையும். பொதுவாக மதம் என்பது மனிதர்களை ஒழுக்க நெறியில் சீர்மையாக்கி அறநெறியில் பயணித்திடச் செய்திடும் ஒரு வழியாகும். அவ்வாறு அமைகையில் இறைவனைத் துதிக்கவும் போற்றவும் பயன்படுத்தப்படும் இசையில் சொல்லாடல் ஒன்றாக அமைந்து விடுவதில் அதிசயங்கள் ஒன்றும் இல்லை. மாறாக அப்பாடலானது எந்தக் கடவுளாக நினைத்துப் படுகிறதோ அந்தக் கடவுளைப் போற்றுவதாக அமைகிறது. அந்தக் கடவுளின் அந்தச் சமயத்தைப் பின்பற்றும் அவர்களின் நம்பிக்கை சார்ந்து இசைக்கப்படுகிறது.

எழுத்து என்ற மலரும் தாளம் என்ற கயிறும் ஒன்றாகப் பயணிக்கையில் இசை என்னும் மாலையாய் இறைவனுக்குச் சென்று சேருகிறது.

**உதாரணம்: 1**

கருணை உன் வடிவல்லவா கடவுள் உன் பெயர் அல்லவா

கடந்தாலும் உள்ளத்தின் உயிர் வாழ்பவா -

கருணை உன் வடிவல்லவா

வானம் பறந்தாலும் அங்கும் உன் மேன்மை தங்கும்

கடலாலும் சென்றாலும் உன் ஞானம் பொங்கும்

எங்கெங்கும் தெய்வீக மயமல்லவா (Vamanan, 2004)

**உதாரணம்: 2**

அன்பே அன்பே என் நெஞ்சுக்குள் நீ வா

அன்பால் நெஞ்சம் ஆளச் சொல்லித்தா

ஏழை எந்தன் என் உள்ளம் நீ வா

ஏங்கும் எந்தன் தாகம் தீர்க்கவா

வாழ்வெனும் பாடம் கற்றுத்தா

வாழ்வெனும் பாடம் கற்றுத்தா (Vamanan, 2004)

**உதாரணம்: 3**

அன்று கேட்பவன் அரசன் மறந்தால்

நின்று கேட்பவன் இறைவன்

நடுவில் மனிதன் வாழுகின்றான்

விண்ணில் மனம் தடுமாறுகிறான்

இறைவா இறைவா இறைவா

மனம் போல் மாங்கல்யம் என்பார்

தன் மனமே சகலமும் என்பார்

தெரிந்தும் குணத்தை இழக்கின்றான்

இதயம் குலைந்து தவிக்கின்றான்.

இறைவா இறைவா இறைவா

கற்றது கைமண் அளவு

கரை கண்டவர் இங்கே குறைவு

கண்டு அறிந்தவர் ஓர் தலைவன் - 2

யாவும் அருள்வான் நம் இறைவன்

இறைவா இறைவா இறைவா (Vamanan, 2004)

## திரையிசை வழியாக சைவ சமயப் பக்தி பாடல்கள்

அனைத்து சமயத்தைப் பற்றிய அடிப்படை ஆரம்பம் தெரிய காரணமாக இருந்தது இசைதான் எனக் கூறினாலும் அது மிகையாகாது. ஏனென்றால் இறைவனை துதிக்கையில், இறைவேண்டலில் பாடல்கள் வழியாகவே அதிகப்படியான இடத்தை பிடித்துள்ளதை நாம் அறியலாம். உதாரணமாக கீர்த்தனைகள், பஜனைகள் என ஆரம்பிக்கப்பட்டு, பின் சாதாரண வார்த்தைகளால் இறைவனைப் புகழும் படியாகவும், போற்றும் படியாகவும் அறச்செயலையும், ஒழுக்க நெறிகளையும் சுமந்த பாடல்களாக வெளிவந்தன. அந்த வகையில் ஒலி, ஒளி அமைப்புடன் நாடகங்களிலிருந்து மேன்மை பெற்று திரையிசை வழியாகப் பக்தி பாடல்களைக் காணும் போதும், கேட்கும் போதும் அவற்றுள் மனமானது இறைவனில் ஒன்றிணைத்து ஐக்கியமாகின்றது. பல பிண்ணனிப் பாடகர்கள் சைவ சமயப் பாடல்களை திரைப்படங்கள் மற்றும் ஒலித் தொகுப்பாகவும், நாட்டுப்புற பாடல்களாகவும் பாடியுள்ளார்கள்.

**எடுத்துக்காட்டாக:**

தியாகராஜ பாகவதர் கீர்த்தனைகள் சீர்காழி கோவிந்தராஜன், டி. எம். சௌந்தரராஜன், கே.ஜே. யேசுதாஸ், எஸ்.பி. பாலசுப்ரமணியன், உன்னிகிருஷ்ணன், மனோ, கிருஷ்ணராஜ் போன்றவர்கள் பக்திப்பாடல்களாகவும், கர்நாடக இசைப் பாடல்கள் வழியாகவும் சைவசமய பாடல்களை பாடியுள்ளனர் அட்டவணை 1- யில் பின்வருமாறு.

**அட்டவணை 1.** சைவசமய திரையிசைப் பாடல்கள், ஒலித்தொகுப்பு - பக்தி பாடல்கள் கிறித்தவ சயய

| பாடகர் | பாடல் | படம் |
|---|---|---|
| சீர்காழி கோவிந்தராஜன் | நமசிவாயம் என சொல்வோமே | அகத்தியர் |
| டி எம் சௌந்தரராஜன் | பாட்டும் நானே பாவமும் நானே | திருவிளையாடல் |
| டி எம் சௌந்தரராஜன் | காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி | திருவருட்செல்வர் |
| டிவி ரமணி | சிவபுராணம் | பக்தி பாடல்கள் |
| கே.ஜே. ஜேசுதாஸ் | பிட்டுக்கு மண் சுமந்து | பக்தி பாடல்கள் |
| உன்னிகிருஷ்ணன் | ஆருயிர் ஈசனே ஹர ஹர சிவ ஓம் | பக்தி பாடல்கள் |
| எஸ்.பி.பாலசுப்ரமணியம் | ஹர ஹர சிவனே அண்ணாமலை | பக்தி பாடல்கள் |
| சீர்காழி கோவிந்தராஜன் | விநாயகனே | பக்தி பாடல்கள் |

பொதுவாக இசையைப் பற்றிக் கூறும் பொழுதும், இசைப் பாடல்களைப் பற்றியும் கூறும் பொழுதும் எந்த ஒரு நிகழ்ச்சியும் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் விநாயகனே என்ற பாடல் இல்லாமல் கிராமத்தில் நிகழ்வுகள் அமைவதில்லை. அந்த அளவிற்குப் பாடலும் இசையும் ஒவ்வொருவர் இல்லத்திலும் மட்டுமல்ல உள்ளத்திலும் நிறைந்துள்ளது. குறிப்பாக சைவ சமயத்தவர் நிகழ்வோடும், வாழ்வோடும் ஒன்றி இருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

## திரையிசை வழியாக கிறித்தவப் பாடல்கள்

அனைத்து சமயத்தைப் போலவே திரைப்பட இசையில் கிறித்தவப் பாடல்களையும் சினிமா பிண்ணனிப் பாடகர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். அட்டவணை-2- யில் பின்வருமாறு.

அட்டவணை-2. கிறித்தவ சமய திரையிசைப் பாடல்கள், ஒலித்தொகுப்பு - பக்தி பாடல்கள்

| பாடகர்கள் | பாடல் | படம் |
|---|---|---|
| டி.எம் சௌந்தரராஜன் | தேவனே என்னை பாருங்கள் | ஞான ஒலி |
| கே ஜே ஜேசுதாஸ் | கண்ணே வா கண்மணியே வா | குழந்தை இயேசு |
| லதா ரஜினிகாந்த் | கடவுள் உள்ளமே கருணை இல்லமே | அன்புள்ள ரஜினிகாந்த் |
| பி சுசீலா | கருணை மழையே மேரி மாதா | வேளாங்கண்ணி |
| மனோ | நெஞ்சில் ஒரு சங்கீதமே நித்தமுமே | பக்தி பாடல்கள் |
| எஸ்.பி.பாலசுப்பிரமணியம் | வானம் திறந்து வெண்புறா போல இறங்கி வர வேண்டும் தேவா வல்லமை தர வேண்டும் | பக்தி பாடல்கள் |
| எஸ்.பி.பாலசுப்பிரமணியம் | வழிகாட்டும் என் தெய்வமே | பக்தி பாடல்கள் |

லதா ரஜினிகாந்த் அவர்கள் எல்லோரும் கேட்கும் ஒரு உன்னதமான பாடலான கடவுள் உள்ளமே கருணை இல்லமே என்ற பாடலை அன்புள்ள ரஜினிகாந்த் என்ற பாடத்தின் மூலமாகவும், பி சுசீலா அவர்கள் கருணை மழையே மேரி மாதா என்ற பாடலை என்ற வேளாங்கண்ணி படத்தின் மூலம் பாடியுள்ளனர். மேலும் ஒலித்தொகுப்பு வழியாகவும் பல தமிழ்ப் பாடல்கள் கிறிஸ்தவ மதத்தைப் பற்றி அறியச் செய்யும் வகையிலும், மதத்தில் போதிக்கப்படும் அன்பு, பாசம், பரிவு, இரக்கம், மன்னிப்பு போன்றவற்றை எடுத்துக் கூறும் வகையிலும் ஒலி-ஒளி அமைப்பாகவும் வெளிவந்துள்ளன உதாரணமாக, பாடகர் மனோ அவர்கள் நெஞ்சில் ஒரு சங்கீதமே நித்தமுமே என்ற பாடலையும் எஸ் பி பாலசுப்பிரமணியம் அருள் வானம் திறந்து வெண்புறா போல இறங்கி வர வேண்டும் தேவா வல்லமை தர வேண்டும் மற்றும் வழிகாட்டும் என் தெய்வமே என்ற பாடல்களும் இதுபோன்ற பல பாடல்களும் பின்னணி பாடகர்களால் பாடப்பட்டுள்ளது. அப்பாடல்களின் மூலம் இறைவேண்டல்களும், துதிகளும் தேவாலயங்களில் நிறைவேற்றப் பட்டு வந்துள்ளன, வந்துகொண்டும் இருக்கின்றது.

இதிலும் சிறப்பாக சிங்கப்பூர் முன்னாள் குடியரசுத்தலைவர் எஸ்.ஆர்.நாதன் அவர்களின் இறுதி மரியாதையில் ஒரு தமிழ்ப் பாடல் ஒலித்தது அந்தப் பாடலைப் பாடியதற்காக இந்திய நாட்டின் தேசிய விருதும் கிடைத்தது அவர் பெயர் கிருஷ்ணராஜ். அந்த பாடல் ‘தஞ்சாவூரு மண்ணு எடுத்து தாமிரபரணி தண்ணிய விட்டு சேர்த்து சேர்த்து செஞ்சது இந்த பொம்மை ‘அந்தப் பாடலுக்கு சொந்தக்காரரான கிருஷ்ணராஜ் கிறித்துவ பாடல்கள் பெரும்பாலும் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

## இசை நாடகங்களில் இருந்து திரைப்படப் பாடல்களில் பக்தி பாடல்கள்

பேசும் படம் 1931இல் வெளிவரும்போது சினிமாவுக்கான மொழி என தனித்தனி இல்லாதிருந்த காலம் அது. இலக்கியம் கொண்டிருந்த மொழியை சினிமாவும் கொண்டிருந்தது. சினிமா பேசத் தொடங்கிய காலத்தில் இருந்த கலை வடிவங்களான கூத்துக்கள், கதாகாலட்சேபம், நாடகங்கள் இவற்றில் இருந்தே சினிமாவுக்கான பாடல்களும் சினிமாவுக்கான பாடுபொருள்களும் மொழிநடைகளும் வாங்கிக்கொள்ளப்பட்டன (Vamanan, 2004).

நமது நாடகங்கள், கூத்துக்கள் போன்றவை யாவும் புராண இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றில் பேசிக்கொண்டிருந்தனர். 1916 ஆம் ஆண்டு கீசகவதம் என்னும் பெயரில் ஒரு திரைப்படம் தயாரிக்கப் பட்டது. தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ஊமை படம் அது.

தொடர்ந்து திரௌபதி வஸ்திராபரணம், மயில் ராவணன், மார்க்கண்டேயா முதலிய படங்களை நடராஜ முதலியார் தயாரித்தார். பேசும் படம் வந்தபோது ஒரு இராமாயணம், ஹரிச்சந்திரா(1932), சத்தியவான், சாவித்திரி, சீதா கல்யாணம், பிரகலாதா, வள்ளி திருமணம் (1933), தசாவதாரம் பவளக்கொடி, லவகுசா, ஸ்ரீ கிருஷ்ணலீலா, திரௌபதி வஸ்திராபரணம் (1934) எனப் புராணம் கலந்த பக்தி படங்களாகவே வந்தது. (Vamanan, 2004).

பின்வரும் காலங்களில் திருவிளையாடல் (1967), கந்தன் கருணை (1967), திருவருட்செல்வன் (1967), அகத்தியர் (1972) போன்ற திரைப்படங்களின் பாடல்கள் வழியாகச் சைவ சமயத்தின் பெருமையைக் காணமுடிந்தது.

## இலக்கியத்தில் சைவ பக்தி பாடல்கள்

மனிதனுக்குள் திறமைகள் பல. அவற்றுள் சிறந்தது இசைத் திறமை. இசையிற் சிறந்தது தமிழிசை. தமிழ் என்ற சொல்லுக்குள் இசை என்ற பொருளும் உண்டு. இசை தமிழிசை, இத்தமிழிசையாம் தென்னிசையைத் தேனிசை என்றும் அழைப்பர். மனித சக்திக்கு எட்டியவரையில் இசைக் கலையை எவ்வளவு தூரம் எவ்வளவு மேன்மையாக வளர்க்க முடியுமோ, அவ்வளவிற்குத் தென்னிந்திய இசையை நம் முன்னோர்கள் வளர்த்திருக்கிறார்கள்.

சிறப்பாகத் தேவார மூவராகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரைக் குறிப்பிடவேண்டும். இறைவனுக்கு நிவேதனப் பொருள் இசைதான். இசையின் மூலம் தான் இறைவனிடம் நம் பக்தி கொள்ளவும் இறைவனைப் பற்றிக் கொள்ளவும் முடியும். உலகம் முழுவதற்கும் இவ்வுண்மையை ஒத்தாயினும் தமிழ் மக்களுக்கு இஃதோர் தனிப்பட்ட அனுபவம். அவ்வாறு திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் அர்ச்சித்த பாடல்கள் தேவாரங்கள் ஆகும் தேவாரத்தில் விளங்கும் இருபத்தி மூன்று படங்களில் ஒன்றான காந்தாரப் பண் இசை இலக்கணத்தையும் இறைவன்பால் கொண்ட மன உறுதியுடனும் பக்தியுடனும் பாடிய பண்ணினால் நிகழ்ந்த அற்புதத்தையும் காண்போம்.

## திருஞானசம்பந்தர் தேவாரம்

மதுரையில் பாண்டிய அரசர்களின் (நின்றசீர் நெடுமாறன்) அரண்மனைக்கு வந்த வெப்ப நோயை அவருடைய அரசவையில் சார்ந்த சமண குருமார்கள் தீர்க்க முடியாமல் விட்டுவிட, ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு "என்னும் திருநீற்றுப் பதிகம் பாடி அரசன் மேனியிலும் திருநீறு பூசி அவருக்கு வந்த வெப்ப நோயைக் குணப்படுத்தினார் (Soundara Pandian, 2006).

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு

சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு

தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு

செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே" (Natarasan, 2004)

## திருநாவுக்கரசர் தேவாரம்

அப்பர் பெருமான் சமணத்து விட்டு சைவத்துக்கு மாறிய பின் புத்த, சமண குருமார்கள் பெருந்துயர் கொடுத்தனர். பல்லவ மன்னனிடம் அவரைப் பற்றிப் புறங்கூறிப் பல இன்னல்கள் கொடுத்தனர். நஞ்சு கலந்த பால் சோற்றைத் கொடுத்தும், நீற்றறையில் இட்டும் துன்புறுத்தினர். பொது இடத்தில் மத யானையை ஏவி அவரைக் கொல்ல முயன்றனர். ஆரவாரமாக வந்த அந்த மத யானையைப் பார்த்து அப்பர் பெருமான் "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்ற பதிகத்தைக் காந்தாரப் பண்ணில் அமைத்துப் பாடினார். பாடலைக் கேட்டு மதயானை அவரின் வலம் வந்து வணங்கித் துதித்து. மன்னரும் மக்களும் இறையருளால் நடந்தது என எண்ணினர் என்றாலும், அப்பர் பெருமான்

அப்பொழுது பாடிய இப்பாடல் யானையையும் உருகச் செய்து, அப்பருக்கும் மனவுறுதியும், பெருமிதத்தையும் அளித்தது. பகைவரையும் பணிய வைக்கும் பண்ணின் பெருமை நம்மை வியக்கச் செய்து (Pulavar Sendurai Muthu, 2006).

"சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர் திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை" (Pulavar Sendurai Muthu, 2006)

## சுந்தரர் தேவரம் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவொற்றியூரில் இருந்து வரும் பொழுது அவருக்கு உடம்பின் சரும நோய் வந்து மிகவும் துன்புற்றார். சோழநாட்டிலுள்ள துருத்தி (தற்போது குத்தாலம்) என்ற தளத்தில் இறைவனிடம் தனக்கு வந்த நோய் நீங்குவதற்கு காந்தாரப் பண்ணில் அமைத்து "மின்னுமா மேகங்கள்" என்னும் பதிகத்தைப் பாடி நோய் நீங்கப்பெற்றார் (Pulavar Sendurai Muthu, 2006).

"மின்னுமா மேகங்கள் பொழிந்தி ழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரை கொணர்ந் கொணர்ந் தெற்றும்
அன்னம்மாங் காவிரி அகன்கரை உறைவார்
அடியிணை தொவழுதும் அன்பராம் அடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா எறம்பெரு மானை
என்னிடம் படும்பினி இடர் கெடுத் தானை" (Pulavar Sendurai Muthu, 2006)

## இலக்கியத்தில் கிறித்தவப் பாடல்கள்

கிறித்தவம் தொடர்பான தமிழ் இலக்கியங்கள் கிறித்தவ தமிழ் இலக்கியங்கள் ஆகும். கிறித்தவ சமயப் பின்புலம் கொண்டோர் ஆக்கிய இதர ஆக்கங்களும் கிறித்தவ தமிழ் இலக்கியமாக வகைப்படுத்தப்படுகிறது. 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி கிறித்தவ அறிமுகம் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் நிகழ்கிறது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடும் ஈழமும் கிறித்தவ ஐரோப்பிய குடியேற்றவாத ஆட்சிக் உட்படுகின்றன. இக்காலத்தில் இருந்த சாதிக்கொடுமை, சலுகைகள், சமய ஈடுபாடு போன்ற பல காரணங்களால் தமிழர்கள் பலர் கிறித்தவ சமயத்திற்கு மதம் மாறினர்.

கிறித்தவ தமிழ் இலக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தக்கப் பகுதி ஐரோப்பியர்களின் தமிழ்ப் பணிகளாகும். சமயத்தைப் பரப்ப அவர்கள் தமிழைக் கற்றனர். அச்சுப் பணி, அகராதி தொகுப்பு,

மொழிபெயர்ப்பு, பேச்சு இலக்கணத் தொகுப்பு, உரைநடை, இலக்கியப் பங்களிப்பு எனப் பல வழிகளில் இவர்கள் பங்களிப்பு செய்துள்ளார்கள்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தங்களின் பாடல்கள் வழியாகத் தொண்டாற்றியவர்கள் வேதநாயகம் சாஸ்திரியார் (1774 -1864), சாமுவேல் வேதநாயகம்பிள்ளை (1826 - 1889), ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணபிள்ளை (1827 - 1900), ஆபிரகாம் பண்டிதர் (1859 - 1919), சேவியர் தனிநாயகம் (1913 - 1980), யாழ்ப்பாணம், தமிழ்நாடு.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தன்னுடைய பாடல்களால் தொண்டாற்றிய மேலைநாட்டு கிறிஸ்தவர்கள் சிலர் ராபர்ட் டி நொபிலி ராபர்ட் டி நொபிலி (1577 - 1656), வீரமாமுனிவர் (1680 - 1746), சீகன்பால்க் (1814 - 1891), ராபர்ட் கால்டுவெல் (1814 - 1891), ஜ. யு. போப்( 1820 - 1908).

## வீரமாமுனிவர் தேம்பாவணி

காணாமல் போன இயேசுநாதரைக் கண்டுபிடிக்கப் பறவையினங்களை வீரமாமுனிவர் தன்னுடைய பாடல்களிலே அழைக்கும் வண்ணம் தேம்பாவணி அமையப்பெற்றிருக்கும்.

"பொன் ஆர் சிறகால் புட்கரம் சேர் புள்குலமே

என் ஆர் உயிரே என் நெஞ்சத்து ஆள் அரசே

ஒன்னார் மனம் நேர் வனம் சேர உற்ற வழி

அன்னான் நாட, அறையீரோ எனக்கு? என்றான்"

அறத்தின் கடலாய் இருப்பவனும் நீயே அருளின் கடலாய் இருப்பவனும் நீயே அரிய கருணைக்கு இருப்பிடமானவனும் நீயே வல்லமையின் கடலாய் இருப்பவனும் நீயே செல்வ கடலாய் இருப்பவனும் நீயே இந்திய மக்களின் உள்ளம் ஒளி பெறுமாறு ஞான அழகின் கடலால் இருப்பவனும் நீயே நான் நிறைபெறக் கடல் போல் நின்று தாங்குவனும் நீ எனக்குத் தாயாய் இருப்பவனும் நீ தந்தையாய் இருப்பவனும் நீயே அனைத்தும் நீயே அல்லவா என்று இறைவனிடத்தில் திருவாசகமனம் அமைய வீரமாமுனிவர் பாடுகின்றார் (Pulavar Sendurai Muthu, 2006).

"அறக்கடல் நீயே அருள் கடல் நீயே அருங் கருணாகரன் நீயே

திறக் கடல் நீயே திருக்கடல் நீயே திருந்து உளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே நிகர் கடந்து, உலகின் நிலையும் நீ உயிரும் நீ நிலை நான்

பெறக் கடல் நீயே தாயும் நீ எனக்கு பிதாவும் நீ அனைத்தும் நீ அன்றோ"

தமிழகக் கலைகள் இயற்றமிழ் கலை, இசைத்தமிழ் கலை, நாடகத்தமிழ் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, தொழில்கலை, போர்க்கலை எனப் பலவகைப்படும் (Pulavar Sendurai Muthu, 2006). இக்கலைகள் பலவற்றையும் புலவர் வீரமாமுனிவர் நூல்களின் வாயிலாகவும், கண்கூடாகக் கண்டும் மகிழ்ந்தார் அவற்றினுள் இசைத் தமிழுக்கு வீரமாமுனிவர் தம் உள்ளத்தை இழந்துவிட்டார் என்றுதான் இயம்ப வேண்டும். தமிழிசையில் இப்புலவர் பெருமான் மெய்ம் மறந்து விளங்குகிறார் அத்துணை அளவிற்குத் தமிழிசைக் கலையை போற்றி உரைத்துச் சென்றுள்ளார் (Pulavar Sendurai Muthu, 2006).

தமிழின்கண் அமைந்துள்ள இசை ஏழு வகையாகும் அவை குரல், சத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பதாகும். இவற்றைப் பண் என்று கூறுவர். இப்பண்களை இசைத்து காட்டுவதற்கு என்று பண்டுதொட்டு இருந்து வரும் இசைக் கருவிகள் யாழ் (வீணை), குழல் ஆகியனவாகும். இந்த இசைக்கருவிகளுடன் இனிய குரலாலும் பாடுவது மரபு. இக்கருத்துக்கள் அனைத்தையும் வீரமாமுனிவர் தம் காவியத்தின்கண் உணர்த்தி இசைக் கலையை இனிது போற்றி சென்றுள்ளார் (Pulavar Sendurai Muthu, 2006),

"ஏழிசைக் குழலினோ டினிய பண்டொனி

யினோடிசை விடாதே

யாழிசைக் கிவையெலா மிணர் நறுங்

கொடியினோ னறைய நாதன்

கேழிசைத் தெளிறுதாள் கெழுவதும் பலர்

நாளு மழையை வாரிச்

சூழிசைத் திடையுலாந் தொகையிலந் தாமரே

தொழுது போனார்"

என்ற பாடலும்

“ஈரேழு வகுப்பிற் றேர்ந்த விழைமணி நல் யாழ் வாங்கி

யோரேழு குழலினோதை யுரிக்கிளை தளிர்ப்பப் பாகின்

னேரேடு மிடற்றினோதை நெறிகள் மூன்றியக்கிக் காட்டிப்

பாரேழு நடங்கள் வாட்sடப் பாடினர் சிறப்பின் வானோர்” (Pulavar Sendurai Muthu, 2006).

என்ற பாடலும்

"மின்னாரினிது இசை பாடலில் வினை என்பது"

என்ற அடியும்,

"கானல கனியினும் கனிந்த யாழொடு

தேனல பல் இயம் திளைக்கும்"

என்ற பகுதியும் இவை போன்ற மற்றும் பல பாடல்களும் இசைத்தமிழ் கலையை இனிது புலப்படுத்துகின்றன (Pulavar Sendurai Muthu, 2006). இவற்றில் ஏழு இசை என்பதையும், இசைக் கருவிகளையும், பாடுகின்ற முறையினையும், இசைக் கருவிகளை இயக்கும் வகையினையும் எழில்மிகு விளக்கப் பெற்றுள்ளன. இவற்றை நோக்குங்கால் வீரமாமுனிவர் தமிழிசைக் கலை மீது எத்துணை பற்றுக் கொண்டிருந்தார் என்று இனிதுதெளிவாகின்றது.

## இயேசு காவியம் - கவிஞர் கண்ணதாசன்

இயேசு காவியத்தின் தொடக்கத்திகுல் ‘என்னுரை’ என்ற தலைப்பில் கண்ணதாசன் பாடிய காவியத்தை எவ்வாறு பார்த்தார் என்று குறிப்பிடுகிறார். பல சமயங்களில் பலர் என்னை இறவாக் காவியம் ஒன்று எழுதுங்கள் வற்புறுத்தியதுண்டு. அந்த இறவாக் காவியம் “இயேசு காவியம் “தான் என்று நான் உறுதியாகக் கூற முடியும் (Kannadasan, 1982).

"அன்னை மரியா இயேசுவை தாலாட்டில்

சோதிமணி பெட்டகமே சுடரொளியே யூதருக்கு

ஆதிமக னாய்ப்பிறந்த அருந்தவமே தாலேலோ!

மாணிக்கத் தொட்டிலுக்கு வாய்க்காத பெருமையெல்லாம்

ஆநிரைத் தொழுவினுக்கு ஆரளித்தார் எங்கோவே!” (Natarasan, 2004)

இயேசு பிறந்ததைப் பாடல் வரியில்,

“தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது

யூத நிலத்தினிலே!

சத்திய வேதம் நின்று நிலைத்தது
தாரணி மீதினிலே!
எத்தனை உண்மை வந்து பிறந்தது
இயேசு பிறந்ததிலே!
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது
இயேசு வார்த்தையிலே!"

என்ற எளிமையான பாடல்களால் இயேசு பெருமானின் வாழ்வினை மக்களுக்கே தன்னுடைய இயேசு காவியத்தில் வெளிப்படுத்தினார் (Kannadasan, 1982). பாடல்கள் வழியாக இறைவேண்டல் ஒரு மணி நேரம் வேண்டுவதை விட இசையின் வழியாய் இறைவனுக்கு ஒரு பாடல் பாடுவது (கானம் இசைப்பது) இறைவனுக்கு உகந்தது ஆகும் என இறைப்பற்றாளர்கள் கூறுவர். அவ்வகையில் தேவாலயங்களில் ஒவ்வொரு திரு நிகழ்விற்கும், ஒவ்வொரு பாடல், பாடல் குழுவினரும், அவர்களோடு சேர்ந்து மக்களும் புகழ்ந்து போற்றி, ஒற்றுமையுடன் இறைவனுக்கு துதிபலியை, பாடல்களின் மூலம் காணிக்கையாக்குகின்றனர். வருகை முதல் முடிவு வரை இசையின் தொட்டிலில் இறைவனைத் தாலாட்டுவார்கள்.

## இசையின் பரிமாணம்

இசையானது பாடல்களில் ராகங்களாகப் பயணிக்கும் பொழுது ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஒவ்வொரு ராகம் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, கிராமப்புறங்களில் வேலை செய்யும் மக்கள் கடவுளைப் போற்றும் போதும் சரி, தன்னுடைய வேலையின் பளுவைப் போக்குவதற்காகவும் சரி, தனக்கு வந்த வாழ்வின் வாழ்வியற் சூழலுக்கேற்ப நிகழ்வாழ்வின் வார்த்தைகள் அமைத்து நாட்டுப்புறப்பாடல் பாடுவர். அவை சூழலுக்கும் இடத்துக்கும் ஏற்றார் போல் மாற்றி மாற்றி அமையும், இசையும் அதைப்போலவே சூழலுக்கும் இடத்திற்கும் ஏற்றார் போல் மாற்றி மாற்றி அமையும்.

**உதாரணமாக**

தாலாட்டு - நீலாம்பரி ராகம்

மகிழ்ச்சி வரும்பொழுது - கல்யாணி, மோகனம், வசந்த ராகம்.

திருமணம் நடைபெறும்போது - ஆனந்தபைரவி ராகம்.

தேரில் சாமி புறப்பாடு செய்யும்பொழுது - நாட்டை ராகம் ( மல்லாரி)

மழை வரவேண்டிப் பாடுவது - அமிர்தவர்ஷினி ராகம்.

பயிர் வளர்க்க பாடுவது - சாருகேசி ராகம்.

காலை பாடுவது - பூபாளம் ராகம்.

ஒரு பாடலில் பல ராகங்கள் அமைவது - ராகமாலிகா

அவலச்சுவை இருக்கும்பொழுது - முகாரி ராகம்.

கச்சேரியை முடிக்கும்போது பாடுவது - மங்கள ராகம்.

இசைக்கும் பொழுது மயங்கச் செய்வதாக அமைகிறது - யாழ் இசை

இறக்கும் பொழுது உறுதி செய்யும் வகையில் அமைந்த இசை - பறையிசை (Vamanan, 2004)

## முடிவுரை

இசையும் தமிழும் ஒன்றோடொன்று இணைந்து வருவதுபோல இசையும் சமயமும் ஒன்றோடொன்று இணைந்தது. அது சைவ சமயம் ஆனாலும் சரி, கிறித்தவ சமயம் ஆனாலும் சரி, சமணம், இஸ்லாமியம், பௌத்தம் என எந்தச் சமயத்தை எடுத்துக் கொண்டாலும், அதனதன் சமூகத்தில் கொண்டாடப்படும் சமய வழிபாடுகளிலும், இறைவேண்டல்களை நிறைவேற்றுவதிலும் இசையின் பயன் பாடல்களின் வழியிலும், பாடல்களின் பயன் இசையின் வழியிலும், இறைமைக்கும், மக்களுக்கும் இடையே ஒரு தொடர் பாலமாக அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது என்றும் இருந்து கொண்டேதான் இருக்கும். அவை அவரவர் சமூகத்திற்கு ஏற்றார் போல மாறுமே தவிர இசை ஒருபோதும் இறைச் சமூகத்தை விட்டு விலகிச் செல்லாது. இவ்வாறாக மற்ற சமய சமூகத்தினர் இசையைப் பற்றியும் அவர்களின் பாடல்களைப் பற்றியும் அறிய முற்படும்போது இன்னும் அதிகமாக இசை பயன்பாடுகளையும் அதன் பயன்களையும் பெற முடியும்.

## References

Arunachalam, M. (1994) Tholkappiyam Porulathikaram Agathinaiyiyal Urai Valam, Madurai Kamaraj University, Madurai, India

Kannadasan, (1982) Yesu Kaviyam, Kalaikaveri Vijaya Pathippagam, Chennai, India.

Lakshmi, J.P. (2017) Paanum Pannum, Kavya Pathippagam, Chennai, India.

Natarasan, P.R. (2004) Thirugnanasambanda Swamigal Devaram, Uma Pathippagam, Chennai, India.

Pulavar Sendurai Muthu, (2006) Then Suvai Thembavani, Pallavi Pathippagam, Chennai, India.

Soundara Pandian, (2006) Tamilil Keer Thanai illakkiyam, Kannappan Pathippagam, Chennai, India.

Vamanan, (2004) Thirai Isai Alaikal, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License